19th September 1958]

Police stations

* 327 *Q.*—SRI A. V. P. ASAITHAMBI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

முதுகுளத்தூர் பகுதியில் கலவரத்திற்குப் பின் அமைதியை நிலை நிறுத்த புதிய போலீஸ் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளனவா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

Small Savings Scheme

* 328 *Q.*—SRI A. GOVINDASAMY (on behalf of Sri M. P. Sarathi) : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் (Small Saving Scheme) இந்த ராஜ்யத்தில் எவ்வளவு பணம் வசூலாயிற்று ?

(ஆ) மத்திய சர்க்காரின் பங்கு எவ்வளவு ? ராஜ்ய சர்க்காரின் பங்கு எவ்வளவு ?

(இ) இந்த சேமிப்பு திட்டங்களில் குறைந்த சம்பளம் வாங்கும் அரசாங்க ஊழியர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனரா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The gross collections during the year 1957–58 amounted to Rs. 891 lakhs. Allowing for the withdrawals from the post offices and encashments of certificates during the year, the net collections amounted to Rs. 683 lakhs. Out of this net collection of Rs. 683 lakhs, 2/3rds was given by the Government of India as a loan to this Government. The loan bears an interest of 4 per cent, the principal being repayable in one instalment at the end of ten years.

(*c*) No.

SRI A. GOVINDASAMY : இந்த சேமிப்பு நிலையைச் சேமித்தவர்களுக்கு கமிஷன் கொடுக்கப்பட்டதா, அப்படியானால், எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM : A commission is being provided for and I think, it is $1\frac{1}{2}$ per cent.

Idayankulam tank.

* 329 *Q.*—SRI T. VELUCHAMI : கனம் உள் விவகார அமைச்சர் அவர் த செய்து பதிலளிப்பாரா—

(அ) நெல்லை ஜில்லா, சங்கரன்கோவில் தாலூகாவில் இடையன்குளம் மராமத்து எஸ்டிமேட் தயார்செய்து டெண்டர் போட்டு காண்டிராக்ட் விட்டது வாஸ்தவமா ?

(ஆ) பிறகு திடீரென்று வேலையை நிறுத்தியதன் காரணம் என்ன ?

(இ) அந்த வேலை மீண்டும் எப்போது ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The Government have decided that in any estate area taken over by the Government under the Estates Abolition and Conversion into Ryotwari Act, restoration of abandoned tanks should be taken up only after the introduction of ryotwari settlement in that area.

(*c*) The question of resumption of this item of work is under consideration.

[19th September 1958

Sri T. VELUCHAMI : இரண்டு வருஷங்களாயிற்று, இதற்கு எஸ்டிமேட் தயாரித்து, டெண்டர் கூப்பிட்டு, காண்டிராக்ட் கொடுக்க, இப்பொழுது வேலை நிப்பாட்டப் பட்டிருக்கிறது. மக்கள் ஏமாற்றத்தோடு நிற்கிறார்கள். புட் வால்யூ இருப்பதால்தான் இதை புட் ப்ரொடக்ஷன் டிபார்ட்மெண்டார் மராமத்தை எடுத்துக்கொண்டார்கள். ஆகையால் இப்பொழுது, புட் வால்யூவில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்ற முறையில், செட்டில்மெண்டுக்கு முன்பே இதைச் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கைவிடப்பட்ட ஏரியை உபயோகப்படுத்த, அதை சர்வே செய்து, பலன் தருமா என்பதைப் பார்த்து செய்யவேண்டும். ஆகவே சர்வேசெய்து முடியும்வரை, கைவிட்ட ஏரியை ரிப்பேர் செய்யவேண்டுமானாலும் உணவு உற்பத்திக்கு உகந்த திட்டமானால் எடுத்துக்கொள்ளலாமா என்பது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

Mount Road disturbances

* 330 *Q.*—Sri A. V. P. ASAITHAMBI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

ஜனவரி 6-ந் தேதி மவுண்ட் ரேட்டில் நடைபெற்ற கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறதா அல்லது திட்டமிட உத்தேசமுண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : No Sir.

Sri A. V. P. ASAITHAMBI : ஜனவரி மாதம் 6-ம் தேதி சென்னை மவுண்ட்ரோடில் நேருவைப் பார்க்க வந்திருந்த கூட்டத்திலிருந்தவர்கள் கலவரத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நேரு அவர்கள் வேறு பாதையில் சென்றதால் இப்படிப்பட்ட குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. பண்டித நேருவை பார்க்க வந்ததால்தான் கலவரத்தில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் அரசாங்கம் அவர்களுக்கு உடனடியாக உதவி செய்ய வேண்டும். அப்படி உதவிசெய்ய முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : யார் பாதிக்கப்பட்டிருந்தாலும் அதற்கு கலகம் செய்தவர்கள்தான் பொறுப்பு. ஆகவே நஷ்டஈடு கொடுப்பதற்கு அரசாங்கம் பொறுப்பு அல்ல.

Sri N. R. THIAGARAJAN : கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களில் கனம் ஆசைத்தம்பி அவர்களும் ஒருவராக இருந்தால், அவர் சட்டசபை அங்கத்தினராக இருப்பதால் அவருக்கு அதிகப்படியான நஷ்ட ஈடு கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதைப்பற்றிய தகவலை கனம் அங்கத்தினரைக் கேட்டே தெரிந்து கொள்ளலாம்.

Mr. SPEAKER : Hon. Members need not shout. If any hon. Member shouts, I will not call him.

Sri M. KALYANASUNDARAM : On a point of order, Sir, is it in order for the Leader of the House to instruct the Hon. Speaker as to what should be asked and what should not be asked?

Mr. SPEAKER : The Speaker will see whether what the hon. Member says is in order.

Sri K. ANBAZHAGAN : On a point of order, Sir. This particular question is different from the main question.

Mr. SPEAKER : That is for the Hon. Speaker to see.